[1974 சனவரி 24

காற்றுத் தூய்மை கெடுவது குறித்த குழுவின் அறிக்கை.

*127 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர்ப்பகுதிகளில் Air Pollution -ஐத் தடுப்பதற்குரிய வழிவகைகளைப் பற்றி ஆலோசனை கூறுவதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அரசுக்குக் கிடைத்துவிட்டதா?

(இ) ஆம் எனில், அதன் சிபாரிசுகள் யாவை?

(உ) அவை எந்த அளவு நிறைவேற்றப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) & (உ) சட்டப்பேரவையின் முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இந்த ஏர் பொல்யுஷனைத் தடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது சட்டம் கொண்டுவர உத்தேசம் இருக்கிறதா? அப்படியானால் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பொதுவாக சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான அதிகாரங்கள் அரசாங்கத்தினிடம் இருக்கின்றன. எப்படிப் பாதுகாப்பது, என்ன முறைகளைக் கையாள்வது என்பதும், தொழில்கள் நிறுத்தப்படாமல், மக்களுடைய தேவைகள் நிறைவு செய்யப்படுவது தடை செய்யப்படாமல், அதே நேரத்தில் காற்றுத் தூய்மை கெடுதல், நீர் தூய்மை கெடுதல் ஆகியவைகளுக்கு இன்றையதினம் எவை எவை காரணமாக இருக்கின்றனவோ, அவற்றை நடைமுறையில் எப்படி மாற்றுவது என்பதையெல்லாம் நிபுணர் குழு ஆலோசித்து வருகிறது. அப்படி அமைக்கப்பட்ட குழுவின் மூலம் பல்வேறு நிர்வாக அமைப்புகளின் ஒத்துழைப்பைப் பெற்று, அந்தக் காரியங்கள் நிறைவேற்றப்படுவதற்கு முயற்சிக்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தமிழகத்தில் பல நகரங்களில் ஓடுகின்ற ஊர்திகள் கக்குகின்ற புகை மிகவும் அதிகமாக இருக்கிறது. அப்படிப் புகை கக்குவதைக் குறைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

@ 138-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1974 சனவரி 24]

சீமை எண்ணெயைக் கலந்து ஓட்டுவதன் காரணமாக புகை அதிகமாக கக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முதல் நடவடிக்கையாக சென்னை போன்ற பெரிய நகரத்தில்தான் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த முயற்சி ஏற்கனவே அரசாங்கத்தினுடைய போக்குவரத்துத் துறை—இப்பொழுது அது பல்லவன் போக்குவரத்து—நிர்வாகத்தினரிடம் பஸ்களிலிருந்து வெளிப்படுகின்ற புகையினுடைய அளவைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதே நேரத்தில் அந்தப் புகை எந்த அளவுக்கு வருகிறது என்பதை அளப்பதற்கு ஒரு கருவியை பயன்படுத்த வேண்டும் என்றும் சில ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போல வெளியூர்களிலிருந்து வரக்கூடிய லாரிகள் முதலியவற்றினால் ஏற்படக்கூடிய புகையைத் தடுப்பதற்கும், புகையை அளவுக்கு மீறி கக்கினால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் காவல் துறையினர் ஓரளவுக்கு சில நேரத்தில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

அதைப் போல ரயில்வே மூலமாக ஏற்படுகின்ற புகை மிகுதியை தடுப்பதற்கு நிலக்கரி அல்லது நிலக்கரி சாம்பல் 'ஆஷ்' கொட்டப்படுகின்ற இடங்களில் ஈரமாக வைத்து இருப்பதன் மூலம் காற்றில் பரந்து தூற்றப்படாது என்ற ஆலோசனையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒவ்வொரு துறையின் மூலமாகவும் ஓரளவுக்கு இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மண்ணெண்ணெய் கலப்பதைப்பற்றி அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். எண்ணெய் கிடைக்காத காலத்தில் அந்த நெருக்கடியில் அது எந்த அளவு மிகுதியாக இருக்கிறது என்பது இப்பொழுது நமக்குப் புலனாகவில்லை. அதைத் தடுப்பதற்கு அகில இந்திய அரசே கூட எண்ணெய் நிறத்தை மாற்றி அமைப்பதன் மூலம் சில முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். தேவராசன் : மக்கள் பெருக்கத்தைவிட ஏர் பொல்யூஷன் எதிர்காலத்தில் மிகுந்த துன்பம் விளைவிக்கும் என்று கூறுகிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு வாரத்துக்கு ஒரு நாள் எந்த ஒரு வண்டி வாகனமும் நகரில் ஓடக்கூடாது என்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த அவசியம் ஏர் பொல்யூஷன் காரணமாக மட்டும் ஏற்படவில்லை. பெட்ரோல் கிடைக்காத நெருக்கடியான நேரத்தில் மத்திய அரசு அந்த அளவுக்கு ஒரு முறையை கையாள்வதன் மூலம் சமாளிக்க முயற்சிக்கும் என்ற எண்ணம் இருக்கிறது. இதனால் மக்கள் பெருக்கத்தைவிட அதிகமான கஷ்டம் ஏற்படும் என்று யாரும் கருதத் தேவையில்லை. இதனால் ஏற்படும் கஷ்டம், நெருக்கடி, மூச்சு விட்டால் அதில் கெடுதல் ஏற்படும். ஆனால், மக்கள் தொகை அளவுக்கு மீறினால் மூச்சே விடமுடியாத நிலை ஏற்படும்.

மாயூரத்தில் குடிநீர் வழங்கு திட்டம்.

*128 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் குடிதண்ணீர் திட்டத்தினை விரிவுபடுத்த அந்நகராட்சி கடன் தொகை ஏதேனும் கோரியுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாயூரம் நகராட்சி எல்லைக்குள், குடிநீர் வழங்கப்படாத பகுதிகளுக்கு குடிநீர் முதன்மைக் குழாய்களை அமைப்பதற்காக ரூ. 4 இலட்சம் கடன் வழங்குமாறு கேட்டு 1971 ஜூலையில் அந்த நகராட்சி விண்ணப்பித்தது. ஆனால் அப்போது மாயூரம் குடிநீர் வழங்கு திட்டத்தை நீட்டிப்பதற்காக அரசால் ஏற்பளிக்கப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை. எனவே, அப்போது அக்கடன் தொகையை வழங்க தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியம் பரிவுரைக்கவில்லை. அந்நிலை குறித்து அந்நகராட்சிக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது மாயூரம் நகராட்சி எல்லைக்குள் குடிநீர் வழங்கப் படாத பகுதிகளுக்கு 18 மீட்டர் குடிநீர் பங்கீட்டு முதன்மைக் குழாய்களை ரூ 9.4 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்று தமிழ்நாடு குடிநீர் வழங்கு கழிவுநீர் அகற்று வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து